**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

06.8.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.8.2011 முதல் 05.8.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**01-8-2011 முதல் 05-8-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 17 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 4 |
| 5. | வகுப்பறை வன்முறை | 7 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 2 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | 2 |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 8 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 1 |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 2 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 1 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | – |
| | மொத்தம் | 46 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-30
## 01.8.2011 முதல் 05.8.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1970. | 01.8.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்களின் படகு பழுது காரணமாக இலங்கை கடற்பகுதிக்குள் சென்றதால், அதில் இருந்த மீனவர்கள் செல்லத்துறை, குமார், அரசுப்பாண்டி, பரம்பரை, மூட்டி ஆகிய 5 மீனவர்களையும் விசைப்படகையும் இலங்கை டற்படையினர் பிடித்துச் சென்றதாகப் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1971. | 01.8.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் பாம்பன் நகரைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகள் வசந்தி(27) விளாச்சேரி அருகே முனியாண்டிபுரத்தில் உள்ள ஒரு பஞ்சு மில்லில் வேலை செய்து வருகிறார். மில்லின் உரிமையாளர் ராஜேஷ்குமார்(26) வசந்தியை திருமணம் செய்துக் கொள்வதாகக் கூறி பாலியல். வசந்தி புகார். ராஜேஷ்குமார் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 1972. | 01.8.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** விளை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தேனீர், பிஸ்கட் வாங்க அப்பள்ளியில் படிக்கும் மாணவர்களை கடைக்கு அனுப்புவதோடு, கழிப்பறை சுத்தம் செய்தல், தங்களது வாகனங்களை சுத்தம் செய்யச் சொல்லல், ஆசிரியர்களின் கழிப்பறைக்கு தண்ணீர் கொண்டு வைக்கு வேலைகளைச் செய்ய கூறுவதாக அக்கிராமத்தைச் சேர்ந்த தனசேகரன் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1973. | 01.8.2011 | **மதுரை மாவட்டம்:** ஆடி அமாவாசையை முன்னிட்டு அழகர்கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இக்கூட்டத்தை பயன்படுத்தி வாடிப்பட்டி மேட்டு நீரேந்தான் பகுதியைச் சேர்ந்த லட்சமி(65)யிடம் 5 பவுன் நகையும், மற்றும் காளிம்மாளிடம் 31/2 பவுன் நகையும் ராஜிவ்காந்தியிடம் 2 பவுன் நகையும் மர்ம நபர்கள் பறித்துச் சென்றதாக புகார். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1974. | 01.8.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வண்டியூர் சவுராஷ்டிராபுரம் சேகர் மகள் ஜானகி(17) கல்லூரிக்குச் சென்ற மாணவியை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1975. | 01.8.2011 | **கோவை மாவட்டம்:** ரங்கே கவுடர் வீதி, வர்த்தமான் அடுக்குமாடி குடியிருப்பு மூன்றாவது மாடியில் வசிப்பவர் லக்கேந்தர் குமார்(32) மகள் சவிநாஹர். அருகில் வசிப்பவர்கள் லிப்டு மூலம் | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்வதை பார்த்த சிறுமி லிப்டுக்குள் நுழைந்தபோது லிப்டின் தானியங்கி கதவு வேகமாக மூடியதால் மாணவி மரணம். | | |
| 1976. | 01.8.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை காவல்நிலையத்திற்கு வந்த ஆலங்குடி இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் காவல்நிலையத்தில் இருந்த அனைவரும் ரெய்டு சென்றிருப்பதாக தகவல் வரவே காத்திருந்த போது லஞ்ச பணத்தோடு வந்த மதுவிலக்கு இன்ஸ்பெக்டர் கணேசன், ஏட்டு அம்பிகாபதி இருவரும் அப்பகுதியில் லஞ்சம் வசூலித்து வந்ததாக ஆலங்குடி இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் இருவருர் மீதும் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 1977. | 01.8.2011 | **கோவை மாவட்டம்:** குளத்துப்பாளையம் பகுதியைச் சேர்ந்த அப்துல்ரகீம் மகள் அனுஷா(25). மதுரையைச் சேர்ந்த ராஜா கோவையில் வேலை செய்தார். அனுஷா, ராஜா இருவரும் காதலித்தனர். ராஜா ஏற்கனவே திருமனமானவர் என்பதை மறைத்ததோடு தன்னிடம் ரூபாய் 50 ஆயிரம் கடன் வாங்கி வந்ததாக ராஜாவை தேடி அவரது வீட்டிற்கு வந்த அனுஷாவை ராஜாவின் மனைவி மற்றும் உறவினர்கள் தாக்கியதாக அனுஷா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 1978. | 01.8.2011 | **மதுரை மாவட்டம்:** கிருஷ்ணாபுரம் காலணியைச் சேர்ந்த ஜெயராஜ் மனைவி ராணி(43). அதே பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் ரூபாய் கடன் வாங்கினார். பணத்தை திருப்பி செலுத்தவில்லை என கடன் கொடுத்தவர் மிரட்டியதால் கமிஷனர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க வந்த ராணி மயங்கி விழுந்தார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்முரசு |
| 1979. | 02.8.2011 | **நாகை மாவட்டம்:** மறம்பூர் என்ற கிராமத்தில் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் முத்து என்ற மாணவன் கலந்துக் கொண்டான். இதனால் அந்த மாணவனை ADMK கட்சியினர் அடித்து வெள்ளை காகிதத்தில் கையெப்பம் வாங்கினர். இதனால் மனம் உடைந்த மாணவன் விஷம் குடித்தான். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 1980. | 02.8.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** உச்சிப்புளி அரசு மேல்நிலை பள்ளியில் படிக்கும், சத்யாநகர், சேதுபதி நகர் பகுதியைச் சேர்ந்த 45 மாணவ, மாணவிகளின் பெற்றோர் அப்பகுதி ஆர்.ஐ.,யிடம் தங்கள் குழந்தைகளுக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு விண்ணப்பித்தபோது, அவர் சான்றிதழுக்கு பரிந்துரைக்க மறுத்ததோடு "அன்னக்காவடி எடுத்து ஆண்டியாக வாருங்கள்" சான்றிதழ் தருகிறேன் என கூறியதாக பாதிக்கப்பட்ட மக்கள் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1981. | 02.8.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சமத்துவபுரத்தைச் சேர்ந்த சின்னராஜ்(55) மனைவி செல்வி(50). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சின்னராஜ் மனைவியை கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1982. | 02.8.2011 | **மதுரை மாவட்டம்:** ஊமச்சிகுளத்தைச் சேர்ந்த ஜெகதீசன்(44) மனைவி லோகம்மாள்(41). கணவர் மற்றும் உறவினர்கள் கூடுதல் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக லோகம்மாள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 1983. | 02.8.2011 | **தேனி மாவட்டம்:** உத்தமபாளையம் பகுதிகளில் இருந்து அரிவாள்தீட்டி பாறை, மற்றும் தேவாரம், சாக்கலூத்து மெட்டு, கோம்பை ராமக்கல் மெட்டு வழியாக கழுதைகள் மூலம் கேரளாவுக்கு ரேசன் அரிசி கடத்தப்பட்டதாக புகார். 6 கழுதைகளுடன் இருந்த 50 மூடை ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன்அரிசி கடத்தல் | தினகரன் |
| 1984. | 02.8.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வீரசோழனை சேர்ந்த ரகமத்துல்லா மனைவி ரெமிஷாபேகம், கே. புதூரைச் சேர்ந்த காந்தி மனைவி இந்திராணி இருவரும் ரெமிஷாபேகத்திடம் ரூபாய் 80 ஆயிரம் கடன் வாங்கினார்கள். பலமுறை பணத்தை திருப்பிக்கேட்டு பணம் தராததோடு, கொலை மிரட்டல் விடுத்ததாக ரெமிஷாபேகம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் | தினத்தந்தி |
| 1985. | 02.8.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு அருகே உள்ள சித்தரேவு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவன் பிரசாந்த்(17). பிரசாந்த் தேர்வின்போது அருகில் உள்ள மாணவனை பார்த்து எழுதியதால் ஆசிரியர் பூங்குன்றன் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கண்டித்ததால் மனமுடைந்த பிரசாந்த் வீட்டிற்கு வந்து தூக்கிட்டுத் தற்கொலை. | வகுப்பறை வன்முறை & தற்கொலை | தமிழ்சுடர் |
| 1986. | 02.8.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி தாலுகா மாடந்தை ஊராட்சிக்குட்பட்ட மீ.நெடுங்குளம் கிராம தலைவராக இருக்கும் தேவி சிவர்ணம் கிராமத்திற்கு சொந்தமான கருவேல மரங்களை முறைகேடாக வெட்டி விற்பதாக புகார். புகார் கொடுத்த பொதுமக்கள் மீது ஆத்திரமடைந்த தேவிசசிவர்ணம் கிராம மக்களுக்கு மின் இணைப்பு, துண்டிப்பு, மற்றும் ரேசன் பொருட்கள் போடுவதை தடுத்தவருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் புகார். | சமூகப் புறக்கணிப்பு | தீக்கதிர் |
| 1987. | 02.8.2011 | **மதுரை மாவட்டம்:** மானாமதுரையைச் சேர்ந்த செல்லக்கண்ணு மகள் ப்ரியா(17) மூக்கில் ரத்தம் வருவதாக கோ.புதூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார். அங்கு அருக்கு ஹீமோகுளோபின் குறைந்துள்ளதாகக் கூறி ரத்தம் எற்றினார்கள். | மருத்துவர்கள் அலட்சியம் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிகிச்சைக்கு பின்னும் ரத்தம் வந்ததால் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சேர்ந்தார். அவருக்கு அங்கு எச்ஐவி நோய் இருப்பதாக கூறப்பட்டது. தனக்கு தவறான முறையில் கோ.புதூர் மருத்துவமனை மருத்தவர்கள் ரத்தம் ஏற்றியதால் எச்ஐவி நோய் வந்ததாக ப்ரியா புகார். | | |
| 1988. | 02.8.2011 | **மதுரை மாவட்டம்:** வீரபாஞ்சானில் உள்ள TVS பள்ளி நீதிமன்றத்தின் உத்தரவை மீறி நன்கொடை வசூலிப்பதாக புகார். நன்கொடை தராத குழந்தைகளுக்கு 12.30 மணியுடன் வகுப்பு நேரத்தை குறைத்துள்ளதாகவும், மற்றவர்களுக்கு 4.30 வரை வகுப்பு நீட்டித்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை & கூடுதல் கட்டணம் | தீக்கதிர் |
| 1989. | 02.8.2011 | **சென்னை மாவட்டம்:** எண்ணூர் நேரு நகரில் விப்ரோ என்ற தனியார் நிறுவனம் உள்ளது. இந்நிறுவனத்தின் தலைவர் ஜெசுதாஸ், நிர்வாகி தேவி சுய உதவிக் குழு பெண்களிடம் பணம் வசூலித்து மோசடி செய்ததாகவும், நிறுவனத்தை அப்புறப்படுத்தக்கோரி பொதுமக்கள் முற்றுகை போராட்டம். | பெண்கள் மீதான வன்முறை | மார்சல் |
| 1990. | 03.8.2011 | **சென்னை மாவட்டம்:** அரும்பாக்கத்தைச் சேர்ந்த பத்மா. தனது வீட்டை அரும்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜன் சில தினங்களாக அவருக்குத் தெரிந்த சினிமா தயாரிப்பாளருக்கு விற்கும்படி தன்னை மிரட்டுவதாக இன்ஸ்பெக்டர் ராஜன் மீது பத்மா புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல்நிலையைச் சித்திரவதை | மார்சல் |
| 1991. | 03.8.2011 | **சென்னை மாவட்டம்:** பெரியார் நெடுஞ்சாலையில் தாசப்பிரகாஷ் விடுதி அருகே புரட்சிகரமாணவர் இளைஞர் முன்னணி அமைப்பைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் சமச்சீர் கல்வி பாடப்புத்தகங்களை உடனடியாக வழுங்கவேண்டும் என வலியுறுத்தி சாலை மறியல். காவலர்கள் தடியடி. | குழந்தைகள் மீதான வன்முறை & காவல்நிலையச் சித்திரவதை | மார்சல் |
| 1992. | 03.8.2011 | **சென்னை மாவட்டம்:** சேலையூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கும் பணிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு. வழக்கு நீதிமன்றத்தில் உள்ள நிலையில் தோண்டப்பட்ட பள்ளங்கள் தடுப்பு வேலி அமைக்கப்படாமல் கிடந்ததால் அங்கு விளையாடிய சரவணன்(10) பள்ளத்தில் விழுந்து மரணம். அதிகாரிகள் மெத்தனப் போக்கால் சரவணன் இறந்ததாக பொதுமக்கள் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | மார்சல் |
| 1993. | 03.8.2011 | **சென்னை மாவட்டம்:** அதிகக் கட்டணம் வசூலிக்கும் 35 பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்கவும், சமச்சீர் கல்வியை உடனடியாக அமல்படுத்த கோரி சென்னை மெமோரியல் ஹால் எதிரே பெற்றோர்கள் ஆர்பாட்டம். | கூடுதல் கல்விக் கட்டணம் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1994. | 03.8.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள சாமநத்தம் கிராமம், இந்த கிராமத்தில் மந்தை திடலில் உள்ள பள்ளிக்கட்டிடத்தில் 1 ஆம் வகுப்பு முதல் 5 வகுப்பு வரையும், 6ம் வகுப்பு முதல் 10 ம் வகுப்புவரை மெயின்ரோட்டில் சாமநத்தம் விலக்கு பிரிவில் உள்ளது. மந்திைடலில் இருந்து தினமும் சத்துணவு தயாரித்து சாமநத்தம் பகுதிக்கு தினமும் 1.கீமீட்டர் தூரத்திற்கு நடந்தே எடுத்துவருவதாக புகார். | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 1995. | 03.8.2011 | **மதுரை மாவட்டம்:** நரிமேடு பகுதியைச் சேர்ந்த சசிக்குமார்(30) மனைவி பிரியா(25). கணவர் சந்தேகப்பட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த பிரியா தீக்குளித்துத் தற்கொலை. பிரியாவை தற்கொலைக்கு தூண்டியதாக சசிக்குமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 1996. | 03.8.2011 | **விருதுநகர் மாவட்டம்:** நரிக்குடி ஒன்றியத்திற்கு உட்பட்ட முத்தனேரி கிராமத்தில் வசிக்கும் தலித் மக்களிள் வீடு இடிந்து விழும் நிலையில் உள்ளதாக தலித் மக்கள் புகார். கிராம நிர்வாக அலுவலர் உட்பட பலர் வந்து பார்வையிட்டும், நடவடிக்கை எடுக்கவில்லை என தலித் மக்கள்புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1997. | 03.8.2011 | **கரூர் மாவட்டம்:** கிருஷ்ணராயபுரம் வட்டம், பழையஜெயங்கொண்டம் பகவதி அம்மன்கோயில் மற்றும் பேருந்து நிலையம் அருகே அரசு மதுபானக்கடை உள்ளதாகவும் அதை எடுக்க வலியுறுத்தி பெண்களும், பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1998. | 03.8.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை ராணியார் மகப்பேறு மருத்துவமனையில் பிரசவத்திற்கு வரும் பெண்கள் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படும் அவலநிலை உள்ளதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & மருத்துவமனை அலட்சியம் | தீக்கதிர் |
| 1999. | 03.8.2011 | **மதுரை மாவட்டம்:** இரும்பாடி அங்கன்வாடியில் பஞ்சவர்ணம் தனது குழந்தை வைத்தீஸ்வரி(4) விட்டுச் சென்றார். குழந்தை ஜன்னல் கம்பியில் தலையை விட்டு வெளியில் பார்க்கும்போது ஜன்னல் கம்பியில் தலைமாட்டி குழந்தை வைத்தீஸ்வரி மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2000. | 03.8.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணியில் உள்ள ரேசன் கடை எண் 2ல் இருப்பு குறைவாகவும் போலி பில் மூலம் முறைகேடுகள் செய்திருப்பதும், அரிசி இருப்பு அதிகமாக வைத்திருப்பதையும் ரோந்துப் பணியின் போது கலெக்டர் சகாயம் கண்டுபிடித்து கடையின் ஊழியர் செந்தில்குமார் பணி நீக்கம். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 2001. | 04.8.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் சாமுண்டிபுரம் இ.பி.காலனி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புதிதாக வகுப்பறைகள் கட்டி திறந்துவைக்க அமைச்சர் செங்கோட்டையன் | வகுப்பறை வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருவதாக அறிவிப்பு. அமைச்சரின் வருகைக்காக 400க்கும் மேற்பட்ட குழந்தைகள் நீண்ட வெயிலில் காத்திருப்பு. குழந்தைகள் மயக்கம். | | |
| 2002. | 04.8.2011 | **கோவை மாவட்டம்:** ரேஸ்கோர்ஸ் வருமான வரித்துறை அலுவலக பணியாளர் அலெக்ஸ் அதே அலுவலகத்தில் சுகாதார ஊழியராக பணியாற்றி வரும் பெண்ணின் கையை பிடித்து இழுத்ததோடு, ஆபாசமாக பேசியதாக புகார். அலெக்ஸ் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2003. | 04.8.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை கோவில் பாப்பாகுடியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் குழந்தைகள் மையம் ஒன்று உள்ளது. மையம் என்று சொல்வதற்கு உரிய எந்த அடையாளமும் இல்லாமல், சிறிய கட்டத்தில் இயங்கி வருகிறது. 20 குழந்தைகள் வந்து செல்கின்றனர். இங்கு மூடைகள் அடுக்கிவைக்கப்பட்டுள்ளதால் குழந்தைகள் ஓடியாடி விளையாட முடியாமல் தவிப்பதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2004. | 05.8.2011 | **தேனி மாவட்டம்:** தேனி தேவதானப்பட்டியைச் சேர்ந்த மீராமைதீன்(62) அதே பகுதியைச் சேர்ந்த வனசேகரன் இருவருக்கும் நிலத்தகராறு. இந்நிலையில் மீராமைதீனை வனசேகரன் கடத்தியதாக புகார். | முதியவர்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 2005. | 05.8.2011 | **மதுரை மாவட்டம்:** நிலப்பறிப்பு வழக்கில் கைதாகி உள்ள தி.மு.க.பிரமுகர் அட்டாக்பாண்டியை கைது. வில்லாபுரத்தில் ஹவுசிங் போர்டு காலனியில் வசிக்கும் அட்டடாக்பாண்டியின் மனைவி தயாளுவை காவலர்கள் தொந்தரவு செய்வதாக தயாளு மனு. | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 2006. | 05.8.2011 | **மதுரை மாவட்டம்:** வண்டியூர் சேர்ந்த முருகேசன் மகள் கலைவாணி(17). பிளஸ் 2 படிக்கும் கலைவாணி பள்ளிக்குச் செல்லாததால் பெற்றோர் கண்டித்தனர். ஆத்திரமடைந்த மாணவி தீக்குளித்துத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமணி |
| 2007. | 05.8.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் திருப்பரங்குன்றம் மெயின்ரோட்டைச் சேர்ந்த பன்னீர்செல்வம்(50). அதே கடையில் வேலை செய்த சம்சத்பானு(33) இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் பன்னீர்செல்வம் தன்னை மானபங்கப்படுத்த முயன்றதாக சம்சத்பானுபுகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 2008. | 05.8.2011 | **மதுரை மாவட்டம்:** ஹார்விபட்டியைச் சேர்ந்த் ராஜா மனைவி ரேவதி. ஆனையூர் கோசாகுளத்தைச் சேர்ந்த மாதவன்(20), சரவணன், ஆகியோர் ரேவதிக்கு வேலை வாங்கித்தருவதாக கூறி ரூ. 3 லட்சத்தை மோசடி செய்ததாக ரேவதி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 2009. | 05.8.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் வட்டம், பெருமூச்சி அடுத்த கிருபில்ஸ்பேட்டையில் வசிக்கும் அருந்ததியர் சமூக மக்கள். 150 ஆண்டுகளாக குடிசை அமைத்து வாழ்ந்து வரும் இவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தும் வட்டாட்சியர் பட்டா வழங்க மறுப்பதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2010. | 05.8.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல், சிவகாசி மற்றும் ஆலங்குளம் பகுதிகளில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதியை ஆட்சியரின் சோதனையின் போது விடுதியில் உள்ள மாணவ, மாணவியருக்கு தகரப் பெட்டியில் உணவுகள் வைக்கப்பட்டிருப்பதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 2011. | 05.8.2011 | **தேனி மாவட்டம்:** மேலச்சிந்தலைச்சேரியைச் சேர்ந்த செந்தில்குமார் மனைவி கீதா(22). கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தார் துன்புறுத்தி கொலை. கணவர் மற்றும் மாமனார் இருவர் கைது. பெண்ணின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறி கீதாவின் பிணத்தை. இரண்டு மாதங்களுக்கு பின்பு தோண் பிரேத பரிசோதனை. | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினமலர் |
| 2012. | 05.8.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருத்தங்கல் கே.கே.நகரைச் சேர்ந்த சுரேஷ்(27) மற்றும் அவரது நண்பர் மாரியப்பன்(19) இருவரும் இருசக்கர வாகனத்தில் போகும்போது மினிபேருந்து மோதி மாரியப்பன் மரணம். ஆத்திரமடைந்த உறவினர்கள் பேருந்துக்கு தீவைக்க முயற்சி. போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்